# திருமணமான தமிழ்ப் பெண்களின் தொழில் முன்னேற்றங்களைத் தீர்மானிக்கும்காரணிகள்

**கலாநிதி (திருமதி) சிவாணி சண்முகதாஸ்**
மூத்த விரிவுரையாளர் தரம் 1,
சந்தைப்படுத்தல்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய நாகரிக மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாக பெண்கள் பங்களிப்புச் செய்யாத துறைகள் இல்லை என்னும் அளவுக்கு அவர்களுடைய செல்வாக்கும், ஈடுபாடும் ஒவ்வொரு துறையிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. குடும்பப் பாரங்களை சுமந்து கொண்டு தொழில் சார்ந்து முன்னேறுவதென்பது திருமணமான பெண்களுக்கு சவாலாக காணப்படுகின்றது. இவர்கள் தமது தொழில் முன்னேற்றங்களில் வெற்றி காண்பதென்பது பல காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை வட்டத்தில் திருமணம் என்பது மாற்றங்களை உருவாக்கக்கூடிய ஒரு மைல்கல்லாக அமைகின்றது. சட்டபூர்வமான கட்டுப்பாடுகளைக்கொண்டுள்ள திருமண பந்தத்திற்கு பின்னர் பெண்கள் தமது முன்னேற்றங்களைச் சீராகக் கொண்டு செல்வதற்கு பல காரணிகள் தடையாக உள்ளன. பெண்கள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் திருமணமாகிய தமிழ்ப்பெண்கள் முழுமையாக தொழில் சார்ந்து முன்னேற்றம் கண்டுள்ளார்களா, அம் முன்னேற்றங்களைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை என்பது பற்றிய ஆய்வின் தேவைப்பாட்டை பூர்த்திசெய்து ஆய்வு இடைவெளியினையும் குறைப்பதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.பனிப்பந்து மாதிரி எடுப்பினை அடிப்படையாகக் கொண்டு,யாழ் மாவட்டத்தில் கல்வித்துறையில் பணிபுரியும், திருமணமாகிய30 தமிழ்ப் பெண்களிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டு, உட்பொருள் குறியீட்டு பகுப்பாய்வின் மூலம்10 வகையான காரணிகள் அறிந்து கொள்ளப்பட்டன. ஆரம்ப நிலை குறியீட்டில் பெறப்பட்ட 65 குறியீடுகளையும் இரண்டாம் நிலை பகுப்பாய்வில் 24 குறியீடுகளையும் கொண்டு திருமணமாகிய தமிழ்ப் பெண்களின் தொழில் முன்னேற்றங்களில் 10 காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன என அடையாளம் காணப்பட்டுள்ளன. அக் காரணிகளாவன ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவு, கணவரின் ஆதரவு, தங்கியிருப்போர்களின் எண்ணிக்கை, தொழில் முன்னேற்றம் தொடர்பான சமூக மனப்பாங்கு, ஆளுமை, உள நலன், கலாச்சாரம், சமூக விழுமியங்கள், குடும்பம் சார்ந்த கடமைகளும் பொறுப்புக்களும், தொழில்நிர்வாகக் கட்டமைப்பு என்பனவாகும். ஒரு சமூகத்தின் பெண்களின் தொழில் முன்னேற்றம் தொடர்பாக பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கான பல்வேறு செயற்பாடுகளை இவ் ஆய்வு பரிந்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள் :-** குடும்ப அங்கத்தவர்கள், சமூக மனப்பாங்கு, கலாச்சாரம், சமூக விழுமியங்கள், தொழில் நிர்வாகக் கட்டமைப்பு.

**அறிமுகம்**

நாம் வாழுகின்ற சூழல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பல்வேறு வகையான சமூக, பொருளாதார, சூழல், தொழிநுட்ப, சட்டமாற்றங்கள், ஊடாக மனித வாழ்வின் தேவைகளையும், வாழ்க்கைமுறைகளையும் முழுமையாக மாற்றியமைத்திருக்கின்றன. இத்தகைய மாற்றங்களில் ஒன்று தான் குடும்பங்களில் ஆணும், பெண்ணும் வேலைக்குச் சென்று தமது வருமானங்களை அதிகரிக்கவேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. பெண்கள் குடும்பத்தின் மிக முக்கிய கர்த்தாவாகக் கருதப்படுகின்ற எமது பாரம்பரியத்தில் திருமணமாகிய பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. ஒரு சமூகத்தின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் பிரதானமானது அச்சமூகத்தில் பெண்களின் பங்களிப்பும், அவர்களின் வளச்சியுமாகும், குடும்பத்தில் பல்வேறு பங்குகளைத் தனக்குள் சுமந்து செல்லும் பெண் சமூக நிர்வாகம், கல்வி மற்றும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கும் தன்மைபெற்றிருப்பதும் எமது சமூகத்திற்கான வரப்பிரசாதம்தான். எனவே அத்தகைய சமூக முன்னேற்றத்திற்குஉறுதுணையாக இருக்கும் பெண்களின் பங்களிப்பு நிச்சயம் சமூக விழிப்புணர்வு மற்றும் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். ஒரு திருமணமாகிய பெண் (பிறந்தகம், புகுந்தகம், தனது பிள்ளைகள், சமூகம், வேலைத்தளம்). ஆகிய ஐந்து விதமான பரிமானங்களில் தனது நடத்தைகளை வடிவமைத்துக்கொள்ளவேண்டும், இந்த பஞ்ச பரிமானங்களுக்கேற்பத் தன்னை நெறிப்படுத்த வேண்டிய தேவையும், கடமையும், பொறுப்பும், இன்றைய திருமணமான பெண்களிடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன.

பரம்பரையாக நீண்டகாலமாக பெண்கள் குழந்தைகளை பாராமரிப்பவளாகவும், குடும்பம்,வீட்டை பராமரிப்பவளாகவும் கருதப்பட்டாள். (Weight, 1990) பின்னர் சமூகத்தில் பெண்களாலும் எதையும் சாதிக்க முடியும் எனவும் அவர்களுக்குரிய உரிமைகள் சமமாக வழங்கப்பட வேண்டும் என்னும் பால் சமத்துவ நிலை தொடர்பான பல விழிப்புணர்வுகள் உருவாகின. காலப்போக்கில் பெண்கள் தொழில் வாய்ப்பில் பங்குபற்றியதோடு ஆண்களின் வீதத்திற்கு சமமாக இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட வீதத்தில் தொழிற்துறைகளில் பங்களிப்புச் செய்யத்தொடங்கினர். (Clutter buck & Divine, 1987)

பெண்கள் தொழிலில் உள்வாங்கத் தொடங்கிய பின்னர், தொழில்ஸ்தானங்களில் அவர்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய அதேவேளை குடும்பப் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் அவர்களுக்குப் பல சிக்கல்களை உருவாக்கியுள்ளன. திருமணமாகிய பெண்கள் தொழில்ஸ்தானங்களில் பணிபுரியும்போது, ஆண்களை விட பல மடங்கு எதிர்பார்க்கைகள் ஆன குழந்தைகள் பராமரிப்பு, குடும்பப் பொறுப்புக்களை நிறைவு செய்தல், தங்கியிருப்போரை கவனித்தல் என பலகடமைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் சிரமப்படுகின்றனர்.

வளர்முக நாடுகளில் இருபது வருடங்களுக்கு முன்னதாக தொழிற்சந்தையில் பெண்கள் உள்நுழையத் தொடங்கிவிட்டனர். தொழில் கட்டமைப்புக்களைப் பார்க்கும்போது பெண்கள் உயர் பதவிக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் தலைமைத்துவப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். உயர்பதவிகளில் பெண்கள் ஆண்களை விட வினைத்திறன் குறைந்தவர்களாக உள்ளனர் என கூறுவதற்குரிய ஆதாரங்கள் நிருபிக்கப்பட்வில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில், அறிகை மற்றும் திறன் தொடர்பான வேறுபாடுகளையே பலர் ஆய்வு செய்திருக்கின்றனர். Carli and Eagly (2001) அவர்களின் ஆய்வின் படி உயர்பதவிகள் வகிக்கும் பெண்கள் தமது அதிகாரங்களைச் செயற்படுத்துவதில் ஆண்களை விடத்திறமையாக நடந்து கொள்கின்றனர். பெண்கள் புதிய கருத்துக்களை வெளிப்படுத்துவர்களாகவும் குழுவேலைகளில் சிறந்த பெறுபேறுகளை வழங்குபவர்களாகவும் சிறந்த திறமைகளான கேட்கும் திறன், சமாதானம் கொள்ளும் இயல்பு என்பன கொண்டவர்களாக கருதப்படுகின்றனர். மற்றும் அவர்களது நிர்வாகத் திறமையானது ஆண்களை விட சிறப்பாக உள்ளது எனவும் சொல்லப்படுகின்றது. (ibid)

தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது என்பது இன்றைய மற்றும் எதிர்கால நிறுவனங்களுக்குப் பெரிய சவாலாக அமைந்திருக்கின்றது. திறமையான பெண்களை நிறுவனங்களில் தேர்ந்தெடுத்து அவர்களூடாக நிறுவனங்களின் முன்னேற்றம் என்பது குறிப்படத்தக்க தந்திரோபாயமாக காணப்படுகின்றது.

திருமணமாகிய தமிழ்ப் பெண்கள் பதவிகளில் உள்வாங்கப்படும் போது, அது நிறுவனங்களுக்கு சவாலாக அமைந்திருப்பதால்,தொழில் முன்னேற்றங்களில் பின்னிப்பதும், அவர்களுக்கான பயிற்சி, மற்றும் தொழில்சார் அபிவிருத்திகளில் அவை செல்வாக்கு செலுத்துகின்றன. இவ் ஆய்வானது பின்வரும் வினாவுக்கு விடை காண்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. திருமணமாகிய தமிழ்ப் பெண்களின் தொழில் முன்னேற்றங்களில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை? இவ் ஆய்வானது தமிழ்ப் பெண்களின், தொழில் முன்னேற்றக் காரணிகள் தொடர்பான அறிவின் விலாசத்திற்கு உதவுகின்றது. அதேவேளை திருமணமான பெண்களை வேலைக்கமர்த்தும் நிறுவனங்கள் பாலின உணர்திறனுக்கு ஏற்றவிதத்தில், பெண்கள் தொடர்பான மனித வளத்திட்டங்களை முன்னெடுக்கமுடியும். அனேக நிறுவனங்கள் பெண் ஊழியர்களைத் தொடர்ந்தும் நிறுவனங்களில் தக்க வைத்திருப்பதற்கும் பால்நிலை சமத்துவத்தினைப் பேணுவதற்கும் அதிக முயற்சிகள் மேற்கொள்கின்றன. இவ் ஆய்வின் மூலம் திருமணமான தமிழ்ப் பெண்களின், தொழில் முன்னேற்றங்களைத் தீர்மானிக்கும் காரணிகளை அறிந்து கொள்வதனூடாக, நட்பான, பால்நிலை உணர்திறன் உள்ள வேலைச்சூழலை உருவாக்க முடியும். இவ்வாய்வானது கல்விப்புலத்தில் பணிபுரியும் ஆசிரியர்களை மையமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு நோக்கங்கள்**

1. திருமணமான தமிழ்ப் ணெ்களின் தொழில் முன்னேற்றங்களைத் தீர்மானிக்கும் காரணிகளை அடையாளம் காணுதல்
2. தொழில் முன்னேற்றங்களுக்கு சவால்களாக உள்ள காரணிகளை முகாமை செய்வதற்கு, தொழில் நிறுவனங்களுக்கும், பெண்களுக்கும் ஆலோசனை வழங்குதல்

**இலக்கிய மீளாய்வு**

விஜயாமணி (2013) என்பவர் பெண்கள் தொழில் மற்றும் குடும்பம் சார்ந்த இரண்டையும் பங்கெடுப்பதில் சமூக ஆதரவின்மை, பாலின வேறுபாடுகள், அங்கீகாரமின்மை, நிறுவனக் கொள்கைகள், குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய தேவை, ஆரோக்கியமின்மை, போன்றவை செல்வாக்கு செலுத்துவதாக தனது ஆய்வில் குறிப்பிட்டிருந்தார்.

Kate Hutching, Ramanie Samaratunge Yinglu (2015) ஆகியோர் இலங்கையில் உள்ள தொழில் சார் சிறப்புப் பெற்ற பெண்களின் சர்வதேச வேலையின் ஈடுபாட்டிற்கு நேர்க்கணிய பெண்மாதிரிகள், குடும்பம் குறிப்பாக கணவருடைய ஆதரவு, போன்ற காரணிகள் மிகவும் முக்கிய பங்காற்றுவதாக பெண்கள் கருதுவதாக தமது ஆய்வில் குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் தொழிற்துறையில் பெண்களின் பங்களிப்பு ஏறத்தாள 36% ஆக காணப்படுகின்றது. இலங்கையில் அதிக பெண்கள் வேலைக்குச் செல்லாமல் இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு எனவும் கலாச்சார, மற்றும் சமூக காரணிகள் இவற்றிற்கு காரணங்களாக அமைகின்றன எனவும் குறிபப்பிடப்படுகின்றது.

Dubey, Neha, Tiwari Vivek (2014) ஆகியோர் திருமணமான பெண்களின் தொழில் அபிலாஷை களைத் தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டனர். இவர்களது ஆய்வின் முடிவின்படி திருமணமாகிய பெண்களுக்குள்ள மேலதிக பொறுப்புக்களான குழந்தையைப் பராமரித்தல்,வீட்டு வேலைகள், குடும்பம் எதிர்பார்க்கின்ற கலாச்சார கட்டுப்பாடுகள், குடும்பம் மற்றும் அலுவலக வேலைகள் நிறைவு செய்து கொள்வதற்காக, நேரங்களை ஒதுக்குவதால் தமது தொழில் அபிலாஷைகள் தொடர்பான சிந்தனைகளுக்கு நேரங்கள் இன்மை, போன்றவை முக்கிய காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன.மேலும் சில பெண்கள் தமது விருப்பங்கள் அபிலாஷைகளை மாற்றி

அமைப்பதில்லை, இதற்கான பின்னணியானது, குடும்பம், கணவருடைய ஆதரவுமாக கருதப்படுகின்றது. தமது உயர்கல்வியில் சிறந்து விளங்கும் பெண்கள், சுயநம்பிக்கை, தன்னில் தங்கியிருத்தல், கல்வி சார் முன்னேற்றங்களால் சமூக கௌரவம் மற்றும் அறிவு விருத்தி என்பவற்றிற்காக தமது தொழில் முன்னேற்றங்களுக்காக தொடர்ந்து உழைப்பதாக இவ்வாய்வு கண்டுபிடித்திருக்கின்றது. ஒப்பீட்டு ரீதியில் திருமணமாகி குழந்தைகள் இல்லாத பெண்களைவிட திருமணமாகி குழந்தைகள் உள்ள பெண்கள் அதிக சவால்களை எதிர்கொள்வதாகவும் இவ்ஆய்வின் முடிவு கூறுகின்றது.

Hearn (1994) இனது கருத்தின்படி, முகமைத்துவ எண்ணக்கருவானது இருபதாம் நூற்றாண்டின் முழுவதுமாக, பால்நிலைப் பிரச்சினைகளை முழுமையாக தவிர்த்திருக்கின்றது என்பதாகும். இவர் மேலும் தெரிவிக்கையில் முகாமைத்துவத்தில் ஆண்களின் முழுமையான கட்டுப்பாட்டிலிருக்கும், நிர்வாகம் பெண்களுக்கு ஒரு சவாலானவிடயம் என்பதனை முகாமைத்துவ தத்துவம் முக்கியத்துவப்படுத்தவில்லை என மேலும் தனது ஆய்வில் வெளிப்படுதியிருந்தார்.

பெண்கள் தொழில்ஸ்தானத்தில் உள்வாங்கப்படுவதற்கும் நிலைத்திருப்பிற்குமாக பெண்கள் சுயமாக பாடுபட்டு, மிகுந்த சிரமத்தோடு முன்னேறி வருகின்றார்கள். Felista Njiru (2013) என்பவர், பொதுத்துறையில் பணியாற்றும் பெண்களின் தொழில் முன்னேற்றங்களில் எத்தகையகாரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன, என்பதனை ஆய்வு செய்திருக்கின்றார் இவரின் ஆய்வு முடிவின்படி பெண்கள் வேலை மற்றும் குடும்ப சமநிலையைப் பேனுவதற்கு முயற்சி செய்யும் போது மிகவும் மனஅழுத்தத்திற்கு உள்ளாவதாகவும் நிறுவன ஆளணி முகாமைத்துவ கொள்கைகள், பெண்களுக்குரிய சிறப்புச்சலுகைகள், நிர்வாகம் பெண்களின் தொழில் முன்னேற்றம் தொடர்பாக கொண்டுள்ள மனப்பாங்கு என்பவையும் திருமணமான பெண்களின் தொழில் முன்னேற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

Rani, Timothy, Michelle &Kerry (2005) ஆகியோரின் ஆய்வின்படி கல்வித்துறையில் பணியாற்றும் பெண்கள் அவர்கள் வெவ்வேறு கலாச்சாரங்களில் இருப்பினும் பாலின நிலைகளும் தலைமைத்துவம்,வேலை, குடும்பப்பிரச்சினைகள் மற்றும் முறையற்ற வலைப்பின்னல் பயிற்சி என்பன அவர்களின் தொழில் முன்னேற்றங்களில் செல்வாக்கு செலுத்துவதாகவும், அவர்களது கலாச்சாரம் என்பது அவர்களது தொழில் நிலைகளில் வெவ்வேறான தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் தமது ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆய்வு முறைமை

இவ் ஆய்வானது பண்பியல் சார்ந்த ஆய்வு முறையைப் பின்பற்றி ஆய்வு வினாக்களுக்கு விடை காண முயற்சிக்கின்றது. இங்கு ஆய்வுக்கான தரவுகள் கல்விப்புலத்தில் தொழில்புரியும் தமிழ் பெண்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டன. அவர்களுடைய உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தும் ஆய்வு என்பதால் தரவு வழங்குவோரின் எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்தும் ஆய்வு முறையே பொருத்தமானது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.(Lincolin, Y. S., & Guba, E, Rust, R. T., & Cooil, B. (1994); Strauss, A. (1995) ;Silverman, D., & Marvasti, A. (2008)

## மாதிரி எடுப்பும் தகவல் சேகரிப்பும்

இவ் ஆய்வுக்கான தரவுகள் 30 தொழில்புரியும் திருமணமான பெண்களிடம் இருந்து ஆழ்ந்த நேர்காணல் மூலம் பெறப்பட்டது. குறிப்பிட்ட தரவுசேகரிப்பு முறையானது ஆழமான கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக ஏனைய ஆய்வாளர்கள் பின்பற்றிய முறைமைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. இவ்ஆய்வுக்கான மாதிரி எடுப்பானது பனிப்பந்து மாதிரி எடுப்பு முறை நுட்பத்தை பின்பற்றி இருக்கின்றது. இவ் ஆய்வின் நோக்கம் பொதுமைப்படுத்துவதற்கு மாறாக குறிப்பிட்ட ஒரு சமூக நிலையினை வெளிப்படுத்துவதாக மட்டுமே அமைந்திருக்கின்றது (Corbin & Strauss 2008).

தரவு சேகரிப்பின் போது ஒவ்வொரு பெண்ணும் பிரத்தியேகமாக தொழில் முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பாக கேட்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக நீண்ட நேர்காணல் மூலம் பதிலளித்தனர். அவர்கள் சுதந்திரமாக தமது எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு நேர்காணலும் இலத்திரணியல் பதிவு முறையில் பதிவு செய்யப்பட்டு ஒத்த இணைந்த வார்த்தை பிரயோகங்களை ஒழுங்குபடுத்தும் தரவு பகுப்பாய்வு முறையூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. (Lincoln, Y. S., & Guba, E, Rust, R. T., & Cooil, B. (1994)Strauss, A. (1995) Silverman, D., & Marvasti, A. (2008). ஒத்த சொற்களை ஒன்றிணைக்கும் பகுப்பாய்வு ஒழுங்கில் முதலில் பெண்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் பந்திகளாக்கப்பட்டு, பந்திகள் ஒவ்வொன்றும் ஒத்த இயல்பான வாக்கியங்களின் வெளிப்பாடு குறியீட்டு வடிவமாக வெளிப்படை பகுப்பாய்வு செய்யப்பட்டு நடு ஊடு வகையான குறியீட்டு வடிவம் கொடுக்கப்பட்டு இறுதியாக வகைப்பாட்டுக் குறியீடாக திருமணமான தமிழ்ப் பெண்களின் தொழில் முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் வகைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. (Strauss & Corbin 1990). பகுப்பாய்வின் ஆரம்பத்தில் 65 வெளிப்படை குறியீடும் இரண்டாவது நிலைப் பகுப்பாய்வில் 24 நடு ஊடு வகையான குறியீடுகளும் இறுதியாக 10 காரணிகளும் முடிவுகளாக பெறப்பட்டுள்ளன.

**ஆய்வின் நம்பகதகு தன்மையும் நேர்மைத்தகவும்**

பண்பியல் சார் ஆய்வு முறையில் ஆய்வின் நம்பகத்தகு தன்மையும் நேர்மைத்தகவையும் வெளிப்படுத்தும் விதத்தில் கடந்த கால ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட வேண்டுகோள்களை ஆய்வாளர் நிறைவேற்றியுள்ளார் (Lincoln and Guba ,1985; Silverman and Marvasti (2008). ஆய்வாளர் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதற்கு ஆய்வாளர் மிகச்சரியான தரவுப்பதிவுகளை மேற்கொண்டு அவற்றை பத்திரப்படுத்தி எழுதி முடிக்கப்பட்ட தரவுகள் இலத்திரணியல் பதிவேடுகள் பிறிதொரு நபரால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. பண்பியல் ஆய்வு முறையில் நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர் ஒருவரால் இத்தரவுகள், மற்றும் முடிவுகள் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு அவரது திருத்தங்கள் ஏற்றுக் கொண்டு ஆய்வு தொடரப்பட்டது. ஆய்வாளருடைய நோக்கமானது பெண்களுக்கு முழுமையாக விளங்கப்படுத்தப்பட்ட பின்னரே தரவு சேகரிக்கப்பட்டது (Silverman & Marvasti, 2008) மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின் நேர்மைத்தகவினை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வாளர் பெறப்பட்ட தரவுகளை மீளவும் தரவு சேகரிக்கப்பட்டவரிடம், வெளிப்படுத்தி அவற்றின் பொருத்தமான தன்மையினை உறுதிப்படுத்தியுள்ளார். தரவு சேகரிக்கப்பட்டவர்களிடமிருந்து முடிவுகள் எவ்வாறு சொல்லப்படவேண்டும் என ஆராயப்பட்டதோடு முடிவுகளில் அவர்கள் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தினையும் ஆய்வாளர் ஏற்றுக்கொண்டுள்ளார். பின்னர் ஆய்வாளர் முழுத்தரவுகளையும் மீளவும் பரிசீலித்து அனைத்து தரவுகளும் பொருத்தமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொண்டனர். இங்கு தரவு சேகரிப்பானது ஆய்வுக்கான தரவுபெறப்பட்டது, தரவுபோதுமானது என ஆய்வாளரால் உணர்ந்துகொள்ளப்பட்டபோது நிறுத்தப்பட்டது.

இவ் ஆய்வானது முதலாம்நிலை தரவுகளையும் இரண்டாம்நிலை தரவுகளையும் பயன்படுத்தியுள்ளது. இரண்டாம்நிலை தரவுகளாவன இலக்கிய நூல்களாகவும் இலக்கிய நூல்களில் பெண்களின் தொழில் முன்னேற்றத்தடை காரணிகள் தொடர்பாக வெளிப்படுத்திய ஆய்வுக் கட்டுரைகளாகவும் புத்தகங்களாகவும் பயன்படுத்தப்பட்ட அதேவேளை முதலாம்தர தரவுகளாக பெண்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

இவ் ஆய்வுக்கான சனத்தொகை தொழில்புரியும் திருமணமான தமிழ்ப் பெண்களாக உள்ளனர். இவர்களில் இருந்து 30 பெண்கள் மாதிரிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். இவ் ஆய்வின் தரவு பகுப்பாய்வானது உட்பொருள் பகுப்பாய்வு முறைமை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது ஆய்வு வினாவிற்கு விடை கூறும் நோக்கோடும் ஆய்வு நோக்கத்தை அடைந்து கொள்ளும் நோக்கோடும் உட்பொருள்” குறியீடுகள் மூலமாகவும் பகுப்பாய்வு செய்யப்படடன.

**தரவுப்பகுப்பாய்வு**

கல்வித்துறையில் பணியாற்றும் 30 பெண்களிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டன. தமது தொழில் முன்னேற்றம் தொடர்பான காரணிகள் பலவற்றை அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

"திருமணமாகிய பெண்கள் தொழில்புரிவதென்பது மிகவும் ஒரு நெருக்கடியான நிலையாகும். குடும்பத்தில் பொறுப்புக்களைச் சுமப்பதற்கு வேறு அங்கத்தவர்கள் இருந்தால் மட்டுமே எம்மால் முன்னேற முடிகின்றது."

குறிப்பிட்ட பெண்மணி, தனது குடும்பப் பொறுப்புக்களைச் சுமப்பதற்கு குடும்ப அங்கத்தவர்கள் ஆதரவாக இருக்கவேண்டும் எனக்குறிப்பிடுகின்றார். ஏனெனில் ஆணும் பெண்ணும் வேலைக்குச் செல்லும் போது வீட்டில் குழந்தைகளைப் பராமரித்துக் கொள்பதற்கு மிகவும் நம்பிக்கையானவர்கள் இருக்கும் போது மட்டுமே பெண்கள் நிம்மதியாக வேலைக்குச் சென்று தமது தொழிலில் முன்னேற முடியும் என குறிப்பிடுகின்றனர். வேறு ஒரு பெண்மணி இதற்கு மாறாகக் கருத்து தெரிவிக்கையில் "எனது உறவினர்கள், தாய் எவரும் எனக்கு அருகாமையில் இல்லை. கணவரும் நானும் மட்டுமே எனது குடும்பப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்கின்றோம். எனது கணவர் தனது தொழில் முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தைப் போலவே எனது தொழில் வளர்ச்சியினையும் எதிர்பார்க்கின்றார். குடும்ப பொறுப்புக்களை என்னுடன் சேர்ந்து சமமாகப் பங்கெடுப்பதால் எனது முன்னேற்றம் எனக்குச் சவாலாக அமையவில்லை. குடும்பப் பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நிர்வாகத்தில் உள்ள சலுகைகளும் எனது மனஅழுத்தங்களைக் குறைக்கின்றது." இவருடைய கருத்தின்படி போட்டி மிகுந்த வேலைச்சூழலில் தம்மால் முன்னேற முடியவில்லை என்னும் ஆதங்கம் தன்னை வெகுவாக வருத்துவதாக தரவுகள் கூறுகின்றன.

**வேறொரு பெண்மணியின் கருத்தானது**

"திருமணத்திற்கு முன்னர் நான் வேலைத்தளத்திலும் கல்வியிலும் சிறப்பாக செயலாற்றினேன். திருமணம் என்னை முழுமையாக மாற்றியிருக்கின்றது. எனது கணவர் எனது தொழில் முன்னேற்றத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக இல்லை. வேறு குடும்ப அங்கத்தவர்களும், உதவிக்கில்லாமல் குழந்தைகளைபராமரித்து, அவர்களது கல்வி,ஏனைய குடும்ப பொறுப்புக்களை நானே முழுமையாக சுமக்க வேண்டியுள்ளது. இவ்வாறான சுமைகளோடு என்னால் முன்னேற முடிந்தாலும் கணவருடைய ஆதரவு முற்றுமுழுதாக இல்லாதபோது எனது தொழில் அதன் முன்னேற்றம் இரண்டும் எனக்கு தேவையற்றதாக உள்ளது. வருமானம் குடும்பத்திற்குத் தேவை என்பதால் தொழிலில் முன்னேற முடியாமல் ஒரே அளவில் என்னைப் பராமரித்துக் கொள்கின்றேன்". குறிப்பிட்ட பெண்ணுடைய கருத்தின் படி தொழில் முன்னேற்றம் என்பது முழுமையாக கணவன்மாருடைய ஆதரவில் தங்கியிருக்கின்றது என்பதினை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

மிகவும் கடுமையான ஓய்வில்லாமல் பணிபுரியும் கணவன்மார்கள், குடும்பத்தின் முழுப்பொறுப்புக்களையும் மனைவிமார்கள் மீது செலுத்திய போதும் அவர்களது தொழில் முன்னேற்றம் தொடர்பாக எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்தாத காரணத்தால் பல பெண்களால் தமது பொறுப்புக்களை சுமந்து கொண்டு தொழில்ஸ்தானத்தை சிறப்பாக நடத்துகின்றனர்.ஆனால் பெண்கள் முன்னேறக்கூடாது அவர்கள் தமது முன்னேற்றங்களை விடவும் அதிகமாக அடைந்து விடக்கூடாது எனும் மனப்பாங்கு கொண்ட கணவன்மாரகள் காரணமாக தொழில்ஸ்தானங்களில் சவால்களை சமாளிக்க முடியாத பெண்கள் மிகவும் மனஅழுத்தத்திற்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

"எனது வீட்டில் எனது தாய் தந்தை எனக்கு துணையாக இருப்பதோடு கணவரும் மிகவும் ஆதரவாக இருப்பதால் என்னால் இப்படி ஒரு சிறந்த நிலைக்கு வர முடிந்தது. பெண்கள் எவ்வாறு முன்னேறியிருப்பினும், அவர்களது குடும்பம் சார்ந்த பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டதா என்பது தான் எமது சமூகத்தில் பெண்கள் மீதான பார்வையாக இருக்கின்றது. எனவே பெண்களின் முன்னேற்றம் என்பது குழந்தைகள் மற்றும் கணவரின் பொறுப்புக்களை நிறைவு செய்த பின்பே நிறைவடைய வேண்டும்" சில பெண்களுக்குக் குடும்ப ஆதரவும் கணவரின் ஆதரவும் மிகவும்

சிறப்பாக இருந்தபோதும் அவர்களின் தொழில் முன்னேற்றம் என்பது ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகின்றது.

“எனது கணவர் எனக்கு முழுமையாக சுதந்திரம் வழங்கியுள்ளார். கட்டுப்பாடு என்பது இல்லை வேறு உதவிகளுக்கு ஆட்கள் இல்லாத விடத்தும் கணவருடைய ஆதரவு குடும்ப பொறுப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு மிகவும் உதவியாக உள்ளது. ஆனால் எனது கவலை இத்தகைய வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தத் தவறிவிட்டேன் என்பதாகும். இவ்வாறான ஆதரவால் நான் தொழிற்துறையில் நன்றாக முன்னேறியிருக்க வேண்டும். எனக்கு அதற்கான சுயஆர்வம் இல்லை என்றே நினைக்கின்றேன். பெண்கள் தொழில் துறையில் முன்னேறுவதனை தீர்மானிக்கும் காரணிகளில் அவர்களுடைய சுயஆர்வமும் முக்கிய பங்காற்றுகின்றது. என்பது புலனாகின்றது.

“ஓர் ஆசிரியையாய் இருப்பதால் வேலைப்பழுக்கள் குறைவாக இருக்கின்றது. மாலைவேளைகளில் எனது குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றி, பிள்ளைகளின் கல்வியிலும் முழுமையாக பங்கெடுக்கின்றேன். எனது தொழில்ஸ்தானங்களிலுள்ள நிர்வாகச் சலுகைகள், காரணமாக உள்ள விடுமுறைகள் எனது மன அழுத்தத்தைக் குறைத்துள்ளது. வேலை சார்ந்து என்னால் முன்னேறமுடிந்தது”. குறிப்பிட்ட பெண்ணின் கருத்துப்படி தொழில் ஸ்தானங்களிலுள்ள நிர்வாக சலுகைகள்,அவர்களது குடும்ப பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தொழில்ஸ்தானத்தில் முன்னேறுவதற்கும் காரணமாக அமைகின்றது. வேறு ஒரு பெண்ணின் கருத்துப்படி

“எனது கணவர் உயர்பதவி வகிக்கின்றார். அவர் அதிக நேரங்களை தொழில்ஸ்தானங்களில் செலவிடுகின்றார். கூட்டங்கள், கருத்துரைகள் என்பவற்றிற்காக அவர் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சென்றுவிடுகின்றார். இதனால் குடும்பத்தின் முழுப் பொறுப்புக்களையும் நானே நிறைவேற்ற வேண்டியுள்ளது. நானும் தொழிலுக்கு சென்றால் குடும்பம் பாதிக்கப்பட்டுவிடும், என்பதால் நான் தொழில் புரியாமல் வீட்டிலே இருக்கின்றேன். திருமணத்திற்கு முன்னர் கல்வியில் சிறந்து விளங்கிய எனக்கு இவ்வாறு இருப்பது மிகவும் மனவேதனையாக இருக்கின்றது. வேலைபுரியும் பெண்களைப் பார்த்து நான் ஆதங்கப்பட்டுள்ளேன்”.

## ஆய்வின் முடிவும் பரிந்துரைகளும்

ஒரு பெண் தனக்கான பதவிஉயர்வு, உயர்கல்வி, அந்தஸ்து என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக அன்றாடம் கடுமையாக உழைக்க வேண்டிஉள்ளது. இன்றைய இருபத்தியொராம் நூற்றாண்டின் வெற்றிப்படியில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள விரும்பும் திருமணமான பெண்கள் சாதிக்கத்துடிக்கும் அதேவேளை பாரம் தூக்கிகளாக படியேற வேண்டிய நிலை உள்ளதென்பதனை அவளைச் சார்ந்துள்ள சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். பாரங்களோடு படியேறுவது என்பது ஒவ்வொரு படியைத் தாண்டுவதும் மிகப்பெரிய வெற்றியையே குறித்து நிற்கும். எமது கலாச்சாரமும், மேலைத்தேய கலாச்சாரமும் முற்றிலும் வேறுபட்டதாகும். மேலைத்தேய கலாச்சாரங்களில் பெண்கள் சுதந்திரமாகத் தீர்மானங்களை எடுத்து தமது முயற்சிகளில் வெற்றி கொள்கிறார்கள். மாறாக எமது கலாச்சாரத்தில் பெண்கள் தமது கணவன், மற்றும் குடும்பம் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதோடு அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதிலுள்ள சிக்கல் நிலையை தவிர்ப்பதில் முழுக்கவனத்தையும் செலுத்துகின்றனர். எனவே சமூக கலாச்சாரங்களினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற வாழ்க்கை முறையானது பல வெளிச்சூழல் மாற்றங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை உண்டு. உறவு முறை என்பதும், பாசப்பிணைப்பு என்பதும் காலமாற்றங்களோடு மாறிவிடுவதில்லை. தொழிநுட்ப சமூக மாற்றங்களானவை ஒரு பெண் பொறுப்பேற்ற வேண்டிய பல பங்குகளை அறிமுகப்படுத்தியிருப்பினும் தாய், மனைவி என்னும் ஸ்தானங்களானவை எல்லாக்காலத்திலும் ஒரே பரிமானத்தைப் பெறுகின்றது. எனவே ஒரு சமூகத்தை அழகுபடுத்தும் பெண்களின் பொறுப்புக்கள், அவர்களின் தேவைகள் என்பவற்றை அறிந்துகொண்டு, பெற்றோர், உறவினர், கணவர், கணவர் சாாந்த உறவுகள், பிள்ளைகள், நிறுவன மேலதிகாரிகள், அனைவரும் அவர்களின் ஒவ்வொரு முன்னேற்றதிற்கும் ஆதரவளிக்கவேண்டும். பெண்களின் முன்னேற்றமும், வெற்றியும் இத்தகைய சிக்கல் வாய்ந்த இணைப்புக்களூடாக,

பின்னப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டு, அவர்களோடு இணைந்து அவர்களின் வெற்றிக்காக உழைக்க வேண்டும். அதேபோல் பெண்ணும் தமது பொறுப்புக்களையும், கடமைகளையும் சரிவரச் செய்வதினூடாகவும் தமது வெற்றிகளை எட்ட வேண்டும். இதன் மூலம் நாம் ஆரோக்கியமான சமூகச்சூழல் ஒன்றை உருவாக்க முடியும்.

உலகளாவிய ரீதியில் பெண்கள் தொழில்துறைக்கு உள்நுழைந்து பல விதமான பங்காற்றி வந்த போதிலும், திருமணத்திற்குப் பின்னரான தொழில் முன்னேற்றம், அதனைத் தீர்மானிக்கும் காரணிகள் என்பன பல்தேசிய நாடுகள் மற்றும் வெவ்வேறு துறைகளில் பணியாற்றியுள்ள பெண்களுக்கு பொதுவாகக் காணப்படுகின்றது. கடந்தகால ஆய்வுகளை ஆராய்ந்து பார்க்கும்போது, அவற்றின் முடிவுகள் பொதுவாக திருமணமான பெண்கள் உலகளாவிய ரீதியில் தமது தொழில் முன்னேற்றங்களை அடைந்து கொள்வதற்கு பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன என்பது புலனாகின்றது.

தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை முறையும்,அவர்களுக்கான திருமணம் சார்ந்த கட்டுப்பாடுகளும் மேலைத்தேச முறைகளைவிட வேறுபட்டிருப்பினும் தொழில் முன்னேற்றம் என்பது எல்லாச் சமூகத்திலும் உள்ள பெண்களுக்கு அவசியமானதாகும்.ஆய்வு முடிவின்படி திருமணமான தமிழ்ப் பெண்களின் தொழில் முன்னேற்றங்களில் ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவு, கணவரின் ஆதரவு, தங்கியிருப்போரின் எண்ணிக்கை, தொழில் முன்னேற்றம் தொடர்பான சமூக மனப்பாங்கு, ஆளுமை, உளநலன்,கலாச்சாரம், சமூக விழுமியங்கள், குடும்பம்சார்ந்த கடமைகளும் பொறுப்புக்களும், தொழில் நிர்வாகக்கட்டமைப்பு ஆகிய காரணிகள் செல்வாக்கு செலுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. இக்காரணிகள் பல, முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கண்டு கொள்ளப்பட்ட காரணிகளை ஒத்திருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கணவரின் ஆதரவு, திருமணமான பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியம் எனவும், நிறுவனக் கொள்கை ஆரோக்கியமின்மை வேறு குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவின்மை என்பன திருமணமான பெண்களின் தொழில் முன்னேற்றத்தில் செல்வாக்கு செலுத்துவதாக முன்னர் செய்யப்பட்ட ஆய்வு முறைகளோடு ஒத்திருக்கின்றது. (விஜயாமணி 2013) இவ் ஆய்வின் முடிவுகளான கலாச்சாரம் என்னும் காரணியும் முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளை ஒத்திருக்கின்றது. (Dubey, Neha, Tiwasi, Vivek,2014).

குறிப்பிட்ட தமிழ்ச்சமூகத்திலுள்ள கல்விப்புலத்தில் பணியாற்றும் பெண்களை மையமாகக் கொண்ட ஆய்வின் முடிவின் படி கணவர் மற்றும் ஏனையவர்களின் ஆதரவு முக்கியப்படுத்தப்பட்டிருப்பினும் கணவருடைய ஆதரவு அதிகம் இருந்தும், ஆளுமை,சுயஊக்கம் இல்லாதவிடத்து அவர்களின் முன்னேற்றம் தடைப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமணமாகிய தமிழ்ப் பெண்கள் தமது தொழில் முன்னேற்றங்களை வளர்த்துக் கொள்வதற்கு சுயமாக பாடுபடவேண்டியுள்ளது. தமது உடல் நலத்தில் கூடுதல் கவனமெடுக்கும் அதே வேளை தடைகளைத் தாண்டக்கூடிய ஆற்றல் மற்றும் ஆளுமையினை வளர்த்துக்கொள்ளவேண்டும். திருமணமான தமிழ்ப் பெண்களின் முன்னேற்றம் என்பது குடும்ப அங்கத்தவர்கள், சமூகம் மற்றும் கணவர், நிறுவன நிர்வாகம் ஆகியோருடைய ஒத்துழைப்புடன் நிகழவேண்டும் என்பதால் பெண்சார்ந்த சமூக அமைப்புக்கள் தொழில் புரியும் பெண்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை சமூகத்தில் ஏற்படுத்துவதோடு இவர்களின் தொழிற்துறை பங்களிப்புக்காப் பாடுபடவேண்டும் கணவர்மாருடைய ஆதரவு என்பது தமிழ்ப் பெண்கள் மத்தியில் மிகவும் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது.எனவே திருமணமான பெண்களுக்கான தொழில் முன்னேற்றம் தொடர்பான முக்கியத்துவத்தை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு அவர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் முக்கியப்படுத்திப் பெண்களைச் சமமாக, சமநிலை உணர்திறன் செயற்பாடுகளை உருவாக்கி அவர்களுடைய மனப்பாங்குகளை மாற்றியமைக்க வேண்டும். குடும்பப் பொறுப்புக்களைச் சமமாக நிறைவேற்றவேண்டிய கட்டாயத்தை கணவர்கள் மத்தியில் அவர்களது தொழில் வழங்குவோர் ஏற்படுத்தவேண்டும்.

திருமணமான பெண்கள் பணிபுரியும் நிறுவனங்களில் தமது நிர்வாக கட்டமைப்பினை பெண்கள் சார்ந்து முறைப்படுத்தல் அவசியமாகும். பெண்களுக்கான ஓய்வு நேரங்கள், குழந்தைகள் பராமரிப்பு, விடுமுறைக் கொள்கைகள், பால்நிலை சமத்துவம், பொறுப்புக்களை முறையாக பகிர்ந்தளித்தல், உளவள செயற்றிட்டங்கள் ஆலோசனைகள், தொழில் முன்னேற்றங்களுக்கான தூண்டல்கள் போன்ற செயற்பாடுகள் ஊடாகப் பெண்கள் தொழிலில் முன்னேறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்துவதோடு அவர்கள் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யும் வீதத்தினை அதிகரிப்பதற்கு பாடுபடவேண்டும்.

**ஊசாத்துணை நூல்கள்**

1. Carli, L.L. and Eagly, A.H. (2001), “Gender, hierarchy, and leadership: an introduction”, Journal of Social Issues, Vol. 57 No. 4, pp. 629-36.

2. Daily FT (2017) Sri Lanka needs more women in the workforce, accessed on 23rd of May 2017, http://www.ft.lk/columns/Sri-Lanka-needs-more-women-in-the-workforce/4-638859.

3. Dubey, Neha; Tiwari, Vivek(2014), Factors affecting career aspirations among married women. Indian Journal of Health &Wellbeing . 2014, Vol. 5 Issue 7, p59-63. 5p.

4. Felista Njiru (2013) factors affecting career progression of women in the corporate sector: a case study of standard chartered bank in Nairobi, Research project submitted in partial fulfilment of the requirement for the award of the degree of master of arts in rural sociology and community development, University of Nairobi

5. Hearn, J. (1994), ‘‘Changing men and changing managements: social change, social research and social action’’, Women in Management: Current Research Issues, Paul Chapman, London, Ch. 13.Kate Hutchings, Ramanie Samaratunge, Ying Lu, (2015). Examining Sri Lankan professional women’s perceptions of their opportunities to undertake international careersImplications for diversity among cross-cultural managers, International Journal of Cross Cultural Management

6. Lincoln, Y. S., & Guba, E. (1985). Naturalistic inquiry. Beverly Hills, CA: Sage.

7. Maimunah, I. and Roziah, M.R. (2006), High-Flying Women Academics: A Question of Career Mobility, Pelanduk Publications, Subang Jaya.

8. Maimunah Ismail, Mariani Ibrahim, (2008) "Barriers to career progression faced by women: Evidence from a Malaysian multinational oil company", Gender in Management: An International Journal, Vol. 23 Issue: 1, pp.51-66, https://doi.org/10.1108/17542410810849123.

9. Mani V. Work Life Balance and Women Professionals. Global Journal of Management and Business Research Interdisciplinary 2013; 13(5): 2013

10. Rust, R. T., & Cooil, B. (1994). Reliability measures for qualitative data: Theory and implications. JMR, Journal of Marketing Research, 31(1), 1–14. Doi: 10.2307/3151942.

11. Rani Thanacoody,P Timothy Bartram, Michelle Barker, Kerry Jacobs, (2006) "Career progression among female academics: A comparative study of Australia and Mauritius",

Women in Management Review, Vol. 21 Issue: 7, pp.536-553, https://doi.org/10.1108/09649420610692499
Reza Jamali, Mehran Nejati, (2009) "Women's career progression barriers and organisational justice: a study of Iranian society", Business Strategy Series, Vol. 10 Issue: 5, pp.311-328, https://doi.org/10.1108/17515630910989204

12. Strauss, A. (1995). "Notes on the Nature and Development of General Theories." Qualitative Inquiry 1(1): 7-18.

13. Strauss, A. & J. Corbin (1990). Basics of Qualitative Research. California, Sage Publications.

14. Strauss A, Corbin J.( 1990) Basics of Qualitative Research: Grounded Theory Procedures and Techniques. Sage,

15. Silverman, D., & Marvasti, A. (2008). Doing qualitative research: a comprehensive guide. Thousand Oaks, CA: Sage.

16. Vinas, T. (2003), "A place at the table", Industry Week/IW, Vol. 252 No. 7, p. 22.

**அட்டவணை 1: உள்பொருள் குறியீடு, முதல்நிலை, உட்கிடை மற்றும் வகைப்படுத்தல்.**

| **முதலாம் வகைப்படுத்தல்** | **இரண்டாம் வகைப்படுத்தல்** | **திருமணமாகிய தமிழ்ப்பெண்களின் தொழில் முன்னேற்றங்களுக்கான காரணிகள்** |
|---|---|---|
| அதிக வேலைப்பழு | குழந்தைகள் பொறுப்பு | ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவு |
| குழந்தைகள் பராமரிப்பு | கணவர் ஆதரவு | கணவரின் ஆதரவு தங்கியிருப்போர்களின் எண்ணிக்கை |
| குழந்தைகளின் கல்வி குழந்தைப்பேறு கால ஓய்வு | உதவிகளின்மை | தொழில் முன்னேற்றம் தொடர்பான சமூக மனப்பாங்கு |
| கணவர் எதிர்த்தல் | மனமின்மை | ஆளுமை |
| கணவர் உதவி செய்யாமை | மன அழுத்தம் | உள நலன் |
| வருமானம் போதாமை | குழந்தைகளின் பாதுகாப்பு | கலாச்சாரம் |
| வேலைச்சுமை | நிர்வாகக் கெடுபிடிகள் | சமூக விழுமியங்கள் |
| உதவிகளின்மை | ஊக்கப்படுத்தல் | குடும்பம் சார்ந்த கடமைகளும் பொறுப்புக்களும் |
| உறவினர்கள் அருகிலில்லை | நிர்வாகக் கொள்கைகள் | தொழில் நிர்வாகக் கட்டமைப்பு |
| சிறந்த கல்விப் பெறுபேறு | நிர்வாக ஊக்கப்படுத்தல் | |
| திருமணம் ஒரு தடை | விருப்பம் | |
| திருமணம் முக்கிய மைல்கல் | தன்னார்வம் | |
| சுய ஊக்கம் | மனத்திட்டம் | |

| | | |
|---|---|---|
| விருப்பம் | சமூக விமர்சனம் | |
| தொழில் பயம் | சமூகக் கட்டுப்பாடுகள் | |
| நிர்வாக சிக்கல் | பால்நிலை வேறுபாடுகள் | |
| அதிக இடமாற்றம் | வேலைப்பளு | |
| கட்டாய வேலை | தங்கி வாழ்வோர் | |
| கட்டாயக் கல்வி | பெற்றோரின் ஆதரவு | |
| செயற்றிறன் மதிப்பீடு | குடும்பம் சார் பொறுப்புக்கள் | |
| கணவரின் உயர்பதவி | மேலதிகப் பொறுப்புக்கள் | |
| கணவரின் வேலை இடமாற்றம் | தங்கியிருப்போர் | |
| குழந்தைகளின் கடமை | கலாச்சாரம் | |
| மேலதிக தங்கி வாழ்வோர் | கட்டுப்பாடுகள் | |
| கட்டாய வேலை நேரங்கள் | | |
| கணவர் அச்சுறுத்தல் | | |
| விடுமுறைச் சிக்கல்கள் | | |
| மேலதிகாரிகளின் ஊக்குவிப்பின்மை | | |
| மேலதிகாரிகளின் ஆதரவின்மை | | |
| கட்டாய தொழில் முன்னேற்றத்திற்கான தேவைப்பாடுகள் | | |
| சகபாடிகளின் போட்டித்தன்மை | | |
| சமூக அந்தஸ்தினை தொழில் முன்னேற்றத்தினூடாக எதிர்பார்த்தல் | | |
| கலாச்சாரக் கட்டுப்பாடுகள் | | |
| கணவர் தமக்குமேல் தொழில் புரிய விரும்பாமை | | |
| குடும்பப் பொறுப்புக்களை முதலாவதாக அங்கிகரித்தல் | | |
| விருப்பம் | | |
| ஊக்கம் | | |
| தன்னார்வம் | | |
| முன்னேறுவதில் முழுமையான ஈடுபாடு | | |
| பொறுப்புக்களைச் சமாளிக்கும் தன்மை | | |
| மனத்திடமும் நடத்தையும் | | |
| சமூக அங்கீகாரம் | | |
| சமூகப் மனப்பாங்கு | | |

| | | |
|---|---|---|
| பெண்களின் முன்னேற்றம் விரும்பப்படாமை | | |
| சமூக விமர்சனங்கள் | | |
| பயம் மற்றும் சமூக நம்பிக்கையின்மை | | |
| பாலின சமத்துவம் | | |
| நிர்வாகக் கட்டமைப்பு அளவு | | |
| மேலதிக அதிகாரிகளின் பண்பாடு | | |
| கலாச்சாரம் | | |
| தாய் தந்தையின் ஆதரவு | | |
| தாயினுடைய முழுமையான ஆதரவு | | |
| பெற்றோர் உடனிருததல் | | |
| குழந்தைகளுக்குக் கிடைக்கும் முழுமையான பாதுகாப்பு | | |
| கணவரின் ஆதரவு | | |
| கணவரின் வெறுப்பு நிலை | | |
| கணவர் முழுமையாகத் தொழில் முன்னேற்றத்தை வெறுத்தல் | | |
| கணவரின் மனப்பாங்கு | | |
| பிள்ளைகளின் கடமை | | |
| பிள்ளைகளின் ஒத்துழைப்பு | | |
| சமூக நிறுவனங்களின் ஒத்துழைப்பு | | |
| மன அழுத்தம் | | |
| ஆரோக்கியமின்மை | | |
| இயலாமை | | |